# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 29.08.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள் :**

அல்லாஹ்வின் அருளால் இரண்டு நாட்களுக்கு முன் நான் ஜெர்மனியிலிருந்து திரும்பி வந்தேன். கடந்த ஞாயிறன்று ஜெர்மனி ஆண்டு மாநாடு முடிந்தது. இன்று நான் வேறு ஒரு விஷயத்தை கூறவிருந்தேன். அதற்கான குறிப்புகளை நான் எடுத்துக் கொண்டிருந்தபோது நான் கலந்து கொள்ளும் மாநாடு பற்றி அல்லது அந்த மாநாடு நடைபெறுகின்ற நாட்டில் உள்ள ஜமாஅத் பற்றி அங்கு நான் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பிறகு, பொதுவாக நான் கூறுவது என் நினைவுக்கு வந்தது. எனவே, இன்று நான் ஜெர்மனியின் ஆண்டு மாநாடு தொடர்பாக உங்களுக்கு கூறவிருக்கிறேன். மாநாட்டில் பணி செய்தவர்களுக்கு நன்றி கூற வேண்டும் என்பது ஒரு மூஃமினிடம் நாம் எதிர்பார்ப்பதாகும். மேலும், எனது வழக்கப்படி ஜெர்மன் மாநாடு பற்றி நான் கூறாமல் இருந்தால், ஜெர்மனியிலுள்ளவர்கள் நான் அவர்கள் மீது மீண்டும் வெறுப்படைந்துள்ளேன் என்று கவலையடைந்து விடக் கூடாதே என்பதற்காகவும் இதைப் பற்றி நான் கூற வேண்டியதுள்ளது.

இந்த வருடம் நடைபெறும் மாநாடுகளுக்கு கிலாஃபத் ஜுப்ளியையொட்டி மிகுந்த முக்கியத்துவம் இருக்கின்றது. எனவே, ஜெர்மனியில் நடைபெற்ற மாநாட்டைப் பற்றி சுருக்கமாக நான் கூறவில்லையென்றால் பிறகு அங்கிருந்து உடனடியாக தொடர்ச்சியாக கடிதங்கள் வர ஆரம்பித்து விடும். மாநாடு முடிந்த பிறகு மாநாட்டைப் பற்றிய உங்கள் கருத்துக்களை பொதுவாக கூறுவது உங்களது வழக்கமாக இருக்கும் போது நீங்கள் இதுபற்றி கூறாமல் இருந்ததற்கு என்ன காரணம்? என்று அவர்கள் கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.

தங்களது மனத்தூய்மையிலும், நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதிலும் முன்னேறுகின்ற வியக்கத்தக்க அன்பான மக்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான். ஜமாஅத் மனத்தூய்மையிலும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதிலும் மிகப்பெரும் முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வார்த்தைகள் இன்றும் நிறைவேறி வருவதை நாம் பார்க்கின்றோம். உலகின் ஏனைய நாடுகளில் வாழ்கின்ற அஹ்மதிகளிடம் எவ்வாறு அவர்களது மனத்தூய்மையிலும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதிலும் நான் முன்னேற்றத்தைப் பார்க்கின்றேனோ, அவ்வாறே ஜெர்மனி ஜமாஅத்தும் தனது களங்கமற்ற மனத்தூய்மையில் தனது பாதங்களை முன்னோக்கி வைத்தவாறு செல்கின்றது. சில அஹ்மதிகள், முதிய வயதிலுள்ள அஹ்மதிகளாக இருக்கின்றார்கள். அவர்கள் எப்போதும் இளைஞர்கள் மீது குற்றம் சுமத்துபவர்களாக உள்ளனர். ஜெர்மனியிலுள்ள இளைஞர்களுக்கு தொழுகையில் மிகுந்த கவனம் இருப்பதையும் மனத்தூய்மையில் அவர்களது பாதங்கள் முன்னேறிச் செல்வதையும் தெளிவாக எங்களால் பார்க்க முடிகின்றது என்று பலரும் என்னிடம் தெரிவித்துள்ளார்கள். இந்த விஷயங்களை நமது இளைஞர்கள் கருத்தில் கொண்டு செயல்பட்டால் அதன் மூலமாக அவர்கள் தங்களது இம்மையையும் மறுமையையும் சரி செய்பவர்களாக ஆகி விடுவார்கள். அவர்கள் ஜமாஅத்திற்கும் பயனுள்ள மக்களாக விளங்குவார்கள். அல்லாஹ் அவர்களை இவ்விஷயத்தில் முன்னேறிச் சென்று கொண்டே இருக்கச் செய்வானாக.

அஹ்மதிய்யத்தின் உலகம் MTA மூலமாக எதைப் பார்த்ததோ அல்லது கேட்டதோ அதுபோன்றே இந்த மாநாடு அல்லாஹ்வின் அருள்களைப் பரப்பியவாறு தனது முடிவை எட்டியிருக்கின்றது. மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது ஜெர்மனியைப் பொறுத்தவரை இது மிகப்பெரும் எண்ணிக்கையேயாகும். முதலில் நான் எனது கணிப்பின்படி 32,000 பேர் அல்லது 33,000 பேர் மாநாட்டிற்கு வந்திருப்பார்கள் என்று கூறியிருந்தேன். உள்ளூர் மாநாட்டு அமைப்பாளர்களின் கணிப்பும் இப்படித்தான் இருந்திருக்கும். ஆனால், அல்லாஹ் தனது அருளால் எல்லா கணிப்புகளையும் தவறு என்று நிரூபித்து விட்டான் இது அஹ்மதிகளுக்கு கிலாஃபத்துடன் உறுதியான தொடர்பு இருக்கின்றது என்பதற்குரிய ஆதாரமாகும். அல்லாஹ்வின் உதவி நமக்கு கிடைக்கின்றது என்பதற்கும் இது மிகப்பெரும் ஆதாரமாகும். எதிரிகள் எதனை முடித்துவிட வேண்டும் என்று கங்கணங்கட்டிக் கொண்டு செயல்பட்டார்களோ அது இப்போது

எழுச்சியுடன் நிற்பதைக் கண்ட பிறகும் இந்த உலகவாதிகளுக்கும், அறிவுக் குருடர்களுக்கும் அறிவு வரவில்லையென்றால் என்ன செய்ய முடியும்? நாம் உலகத்திற்கு நேர்வழி கிடைக்க துஆ செய்ய முடியும். அதை நாம் செய்து வருகின்றோம். அல்லாஹ் அவர்களுக்கு அறிவையும், புரியும் திறனையும் வழங்குவானாக! எவ்வாறிருப்பினும் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மக்கள் வந்த பிறகும் ஜெர்மனியில் மாநாட்டு ஏற்பாடுகள் பொதுவாக மிகவும் சிறப்பாக இருந்தது. இந்த வருடத்தின் முக்கியத்துவத்தைப் பொறுத்து மாநாட்டு நிகழ்ச்சிகளும் மிகவும் சிறப்பாக இருந்தது. சொற்பொழிவாளர்கள் தங்களது சொற்பொழிவுகளுக்கான தயாரிப்பை மிகச் சிறப்பாக செய்துள்ளார்கள். நான் கேட்ட எல்லாருமே இப்படித்தான் தங்கள கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்கள். மாநாட்டில் கலந்து கொண்டவர்களும் இந்த சொற்பொழிவுகளை கவனமாகக் கேட்டார்கள். அவர்களில் பெரும்பாலார் முழுமையான ஈடுபாட்டுடன் மாநாட்டில் அமர்ந்திருப்பதைப் பார்க்க முடிந்தது. பல நேரங்களிலும் MTA மூலமாக இதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். பொதுவாக எல்லா சமயங்களிலும் மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே இருந்தது. கிலாஃபத் ஜுப்ளியையொட்டிய மாநாடாக இருந்ததால் “கிலாஃபத்” என்ற தலைப்பில்தான் பல சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டன. அதை கேட்டவர்களது முகங்களில் களங்கமற்ற மனத்தூய்மையும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்கின்ற தன்மையையும் நம்மால் பார்க்க முடிந்தது. பொதுவாக எனது சொற்பொழிவு இருக்கும் அந்த சமயத்தை தவிர மற்ற நேரங்களில் மாநாட்டில் இருப்பவர்களது எண்ணிக்கை அந்த அளவு அதிகமாக இருக்காது. ஆனால், இந்த முறை மற்ற சமயங்களிலும் எண்ணிக்கை அதிகமாக இருந்ததை என்னால் பார்க்க முடிந்தது. அல்லாஹ் மாநாட்டை கேட்டவர்களது மனத்தூய்மையிலும் பற்றிலும் மேலும் முன்னேற்றத்தை வழங்குவானாக! மாநாட்டில் அமர்ந்திருப்பவர்கள் மட்டுமல்லாமல் முழு அஹ்மதிய்ய உலகத்திலும் உள்ள ஒவ்வொரு அஹ்மதியின் மனத்தூய்மையையும் ஆழ்ந்த பற்றையும் அல்லாஹ் அதிகமாக வளர்ச்சியடையச் செய்வானாக!

ஜெர்மனியில் பொதுவாக நடைபெறுகின்ற எனது நிகழ்ச்சிகளில் கடந்த வருடம் நடைபெற்ற நிகழ்ச்சிகளுடன் இன்னொரு நிகழ்ச்சி அதிகமாக சேர்க்கப்பட்டிருந்தது. அது ஜெர்மனியிலிருந்தும் ஜெர்மனிக்குப் பக்கத்திலுள்ள நாடுகளிலிருந்தும் வந்த முஸ்லிம் அல்லாதவர்களுடன் பேசுகின்ற ஒரு தனி நிகழ்ச்சிக்கான ஏற்பாடு இருந்தது. அதில் பெரும்பாலார் ஜெர்மனியைச் சார்ந்தவர்கள்தான் இருந்தார்கள். முஸ்லிம் அல்லாத 400-க்கும் அதிகமான நபர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில் ஜிஹாதின் உண்மை நிலையை விளக்கியவாறு அதைப் பற்றிய திருக்குர்ஆனின் போதனைகளை அவர்கள் முன்னால் வைத்தேன். ஹிஜ்ரத்திற்கு முன்னால் மக்கத்துக் காஃபிர்கள் முஸ்லிம்களிடம் எப்படிப்பட்ட பரிமாற்றத்தை மேற்கொண்டார்கள்? ஹிஜ்ரத்திற்கு பிறகு அவர்கள் மீது எவ்வாறு தாக்குதல் நடத்தினார்கள்? முஸ்லிம்கள் எவ்வாறு தங்களை தற்காத்துக் கொண்டனர்? திருக்குர்ஆன் எதிரிகளின் இந்த தாக்குதல்களுக்கு எந்த அளவு எதிர்நடவடிக்கையை மேற்கொள்ள முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கியிருக்கின்றது? இந்த காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஜிஹாதிற்கு என்ன விளக்கம் கூறியுள்ளார்கள்? அஹ்மதிகளாகிய நாம் இப்போது எவ்வாறு ஜிஹாது செய்து வருகின்றோம்? என்பதையெல்லாம் விரிவாக நான் அவர்களுக்கு எடுத்து வைத்தேன். இந்த விருந்தினர்கள் மீது இதன் சிறந்த தாக்கம் ஏற்பட்டது. இவர்களில் சிலர் என்னை சந்தித்த சமயத்தில் இதைப் பற்றிய தங்களது கருத்துக்களை தெரிவித்தார்கள். மிகவும் திறந்த உள்ளத்துடன் அவர்கள் தமது கருத்துக்களை கூறினார்கள். இன்று முஸ்லிம்கள் தொடர்பாக எங்களுக்கு இருந்த பல சந்தேகங்களும் அகன்று விட்டது. இஸ்லாம் மற்றும் ஜிஹாது பற்றிய சரியான விளக்கம் எங்களுக்கு தெரிய வந்துள்ளது என்று அவர்கள் கூறினார்கள்.

சில நாடுகளிலிருந்து படித்த அறிஞர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் பெரும்பாலார் நன்கு படித்தவர்கள்தான் என்றாலும் அவர்களில் சிலர் Journalist (பத்திரிகையாளர்)ஆக இருந்தார்கள். நாங்கள் எங்கள் நாடுகளுக்குச் சென்று பத்திரிகைகளில் இந்த மாநாடு தொடர்பாக செய்திகளை வெளியிடுவோம். கட்டுரைகளையும் எழுதுவோம் என்று என்னிடம் கூறினார்கள். இந்த நிகழ்ச்சி தொடர்பாகவும் Article எழுதுவோம். அதில் முஸ்லிம்களின் அசல் ஜிஹாது எது? என்பதை எழுதுவோம். மேலும் இன்றைய நாட்களில் அஹ்மதிய்யா ஜமாஅத் எத்தகைய ஜிஹாதை செய்கின்றது? என்பதையும் எழுதுவோம் என்று இவர்கள் கூறியுள்ளார்கள். இவர்கள் இதனை சரியாக எழுதும்படி அல்லாஹ் செய்வானாக. ஏனென்றால்,

சில நேரங்களில் இந்த பத்திரிகையாளர்கள் சிலரை திருப்திப்படுத்தும் நோக்கத்தில் அவர்களுக்கு இரையாகி விடுகின்றார்கள். அதன் காரணமாக நாம் கூறியுள்ள கருத்துக்களை சற்று திரித்துக் கூற வேண்டியது அவர்களுக்கு கண்டிப்பானதாக ஆகி விடுகின்றது.

எவ்வாறிருப்பினும் இவர்கள் நமது மாநாட்டில் கலந்து கொண்டு மிகச் சிறந்த தாக்கத்தைப் பெற்றுள்ளனர் என்பது இவர்களது முகங்களிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது. எந்த நாடுகளிலிருந்து பிரதிநிதிகளாக வந்துள்ளனரோ அவற்றில் Astronia, Iceland, Albania, Molta, Rumania, Bulgaria ஆகிய நாடுகளுடன் இதைப் போன்ற வேறு 5 அல்லது 6 நாடுகள் அடங்கும். Iceland என்ற நாட்டில் அனைவருமே கிறிஸ்துவர்கள்தான். அவர்களில் ஒரு முஸ்லிம்கூட இல்லை. ஆனால், அவர்கள் அரபியை எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டுள்ளனர். இந்த விருந்தினர்களில் அதிகமானோர் கிறிஸ்துவர்கள்தான். பல்கேரியா எப்படிப்பட்ட நாடு என்றால் அங்கு முஸ்லிம்களின் பெரும் எண்ணிக்கை இருக்கின்றது. அவ்வாறு முஸ்லிம்கள் இங்கு இருப்பதனால் ஜமாஅத்திற்கு எதிர்ப்பு இருந்து வருகிறது. மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வந்த பழைய உள்ளூர் முஸ்லிம்களான ஐரோப்பியர்கள் பல்கேரியாவில் இருந்து வருகின்றார்கள். ஆனால், இஸ்லாத்தைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. உலகில் ஒவ்வொரு இடத்திலும் நாம் பார்ப்பதைப் போல எங்கெல்லாம் மார்க்கத்தின் பெயரால் குழப்பம் உருவாகின்றதோ அங்கு இந்த முஸ்லிம் நாடுகளில் முல்லாக்களின் மிக முக்கியமான பங்கு அதில் இருக்கின்றது. ஏனென்றால், பொதுவாக மக்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி தெரியாது. ஆனால், அவர்கள் ஜமாஅத்தை எதிர்த்து வருகின்றார்கள். பல்கேரியாவிலும் அஹ்மதிகளுக்கு எதிராக அரசாங்கத்தின் பரிமாற்றத்திற்கு காரணமும் இந்த முல்லாக்கள்தான். ஆனால், அங்கு இருக்கும் அரசாங்கம் இஸ்லாமிய அரசாங்கம் அல்ல. ஜமாஅத் முழுமையான சுதந்திரத்துடன் அங்கு தப்லீக் செய்து இஸ்லாம் தொடர்பாக மக்களுக்கு எடுத்துக் கூறுகிறது. மேலும் அவர்களை ஒரு உண்மையான முஸ்லிம்களாக ஆக்கி இறைவனுடன் அவர்களை தொடர்பு கொள்ள வைக்கின்றது என்றால் அதனால் இந்த பெயர்தாங்கி முல்லாக்களின் தனித்தன்மையானது அழிந்து விடுகிறது. நான் ஏற்கனவே கூறியது போன்று பெரும்பாலான பொதுமக்களுக்கு இஸ்லாம் பற்றி எதுவுமே தெரியாது. ஒவ்வொரு பணிக்காகவும் அவர்கள் தங்கள் பெயர் தாங்கி முஸ்லிம் அறிஞர்கள் தாங்கள் விரும்பும் விஷயங்களை இவர்களுக்கு கூறுகின்றார்கள். அரசாங்கம் ஒரு Council -ஐ உருவாக்கியிருக்கின்றது. எவரைப் பற்றி அந்த Council அல்லது அதன் தலைவர்களில் ஒருவர் இவர் உண்மை முஸ்லிமாவார் அல்லது இந்த அமைப்பு சரியான முஸ்லிம் அமைப்பாகும் என சான்றிதழ் வழங்குவாரோ அந்த முஸ்லிமும், அந்த முஸ்லிம் அமைப்பும்தான் அந்த நாட்டில் தங்களது செயல்களை தொடர முடியும். இதற்காகவும் ஜமாஅத் தனது முயற்சியை செய்து வருகிறது. அல்லாஹ் எதிர்காலத்தில் நமக்கு உதவி செய்வானாக. ஜமாஅத் அங்கு ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டும். பல்கேரியாவிலிருந்து ஒரு மிகப்பெரிய குழு வந்திருந்தது. இதில் அதிகமான எண்ணிக்கை முஸ்லிம்களின் எண்ணிக்கையாக இருந்தது. சில முஸ்லிம் அல்லாதவர்களும் அதில் இருந்தார்கள். எல்லாரும் வெளிப்படையாகவே நாங்கள் இங்கு வந்த பிறகு தான் உண்மையான இஸ்லாத்தின் வடிவத்தை அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் எங்கள் முன்னால் வைத்துள்ளது என்பது எங்களுக்கு தெரிய வருகிறது என்று கூறினார்கள். இப்போது நாங்கள் திரும்பிச் சென்று எங்களது பகுதியில் எங்களது பயணத்தில் ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி எடுத்துக் கூறுவோம். முல்லாக்கள் ஜிஹாது தொடர்பாக கூறுகின்ற தவறான கருத்துக்களை அகற்றி நீங்கள் இங்கு கண்டதையும் உணர்ந்தவற்றையும் கண்டிப்பாக உங்கள் பகுதிகளில் சென்று கூறுங்கள் என்று நான் அவர்களிடம் கூறினேன். அவர்களில் சிலர் ஜமாஅத்தின் பிரசுரங்கள் பல்கேரியாவில் அதிகமாக வழங்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். பல்கேரிய மொழியில் இந்த இந்த பிரசுரங்கள் உள்ளன என்று எனக்கு கூறப்பட்டது. அப்போது நான் நமது முபல்லிக்குகளிடம் நம்மிடமுள் பிரசுரங்களை உடனடியாக இங்கு வந்திருப்பவர்களுக்கு கொடுக்குமாறு கூறினேன். ஏனென்றால், இவர்களுக்கும் நமது ஜமாஅத் பற்றி மிகவும் குறைவான அறிவே இருக்கின்றது. பல்கேரியாவில் முழு சுதந்திரத்துடன் ஜமாஅத் செயல்படும் வகையில் ஜமாஅத் அங்கு நிலைபெற அல்லாஹ் உதவி செய்வானாக. ஜமாஅத் அங்கு இருந்தாலும் அரசாங்கம் Registration -ஐ ரத்து செய்து விட்டது. இது தொடர்பாக நாம் செய்கின்ற முயற்சிகளுக்கு அல்லாஹ் வெற்றியை வழங்குவானாக. பல்கேரியாவில் அதிகமான எண்ணிக்கையில் அஹ்மதிகள் உள்ளனர். அனைத்து அஹ்மதிகளும் தங்களது மனத்தூய்மையில் முன்னேறியவர்களாக இருக்கின்றார்கள். மிகவும் உணர்வுமிக்கவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள்.

அல்லாஹ்வும் எவர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக்கொள்ளும் நற்பாக்கியத்தை வழங்குகின்றானோ அவர்களது மனத்தூய்மையையும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்ளும் தன்மையையும் அவன் எந்த அளவு அதிகரிக்கச் செய்து விடுகின்றான் என்றால் அதை பார்க்கும் போது வியப்பாக இருக்கின்றது. இதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடு இறைவனின் உதவி இருக்கும் என்ற இறைவாக்குறுதி நிறைவேறுகின்ற நிலையாகும்.

ஜெர்மனைச் சார்ந்த ஆண்களுடனும் பெண்களுடனும் மாநாட்டின் கடைசி நாளில் எனது சந்திப்பு இருந்தது. கடந்த வருடம் பெண்களை சந்திக்கும் நிகழ்ச்சி மட்டும்தான் இருந்தது. இந்த வருடம் அமீர் சாஹிப் என்னிடம் கூறியது, ஆண்களோடு சேர்த்து அவர்கள் என்னை சந்திக்கும் நிகழ்ச்சி இருந்தது. முதலில் பெண்களை சந்திக்கும் நிகழ்ச்சி இருந்தது. அப்போது ஒரு ஜெர்மன் பெண் என்னிடம் நான் பைஅத் செய்ய விரும்புகின்றேன் என்று கூறினார். அந்த பெண்ணுக்கு 27 அல்லது 28 வயது இருக்கும். அந்த பெண் இதற்கு முன்னரே அஹ்மதிய்யத்தை பற்றி போதுமான அளவில் விஷயங்களை தெரிந்துள்ளார். ஆனால், பைஅத் செய்யாமல் இருந்திருக்கின்றார். சந்திப்பின்போது நான் இந்த மாநாட்டை கண்டு நல்ல தாக்கத்திற்கு உள்ளாகி இருக்கின்றேன். வெகு நாட்களாக எனக்கு ஜமாஅத்துடன் தொடர்பு இருந்தது. எனக்கு இருந்த ஒரு சில சந்தேகங்களும் இப்போது அகன்று விட்டன. எனவே, இன்று நான் உடனடியாக பைஅத் செய்ய விரும்புகின்றேன் என்று கூறினார். ஆண்களில் ஒருவர் சந்திப்பின்போது பைஅத் செய்ய விரும்பினார். நமது பிரசுரங்களை அவர் படித்துள்ளார். எந்த விஷயம் உங்களை அஹ்மதிய்யத்தை அருகில் கொண்டு வர அதிகம் காரணமாக இருந்தது? என்று நான் கேட்டதற்கு அவர் எனக்கு ஒரு அஹ்மதி சகோதரர் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூலை எனக்கு படிப்பதற்காக தந்தார். அதைப் படித்த பிறகு எல்லாவற்றையும் சூழ்ந்து நிற்கும் இஸ்லாத்தின் முழுமையான போதனைகளின் வடிவம் எனக்கு முன்னால் வந்து விட்டது. இன்று உங்களை சந்தித்த பிறகு நான் அஹ்மதியாக முடிவு எடுத்து விட்டேன் என்று மிகவும் உணர்ச்சிப்பூர்வமாக அவர் கூறினார். நான் அவரிடம் பைஅத் Form இப்போது நிரப்பலாமா? அல்லது பிறகு செய்யலாமா? என்று கேட்டதற்கு இப்போதே என்னிடம் உடனடியாக பைஅத் வாங்கி விடுங்கள் என்று அவர் என்னிடம் கூறினார். அப்போது அங்கு ஜெர்மன் மற்றும் பாகிஸ்தானியர்கள் அல்லாத மக்கள் கூடியிருந்த ஒரு சபையில் எல்லாருமே அஹ்மதிகளாக இருந்தார்கள். அந்த சபையில் வைத்து அவர் என்னிடம் பைஅத் செய்தார். அப்போது அங்கு ஒரு இளைஞரும் பைஅத்தில் கலந்து கொண்டார். அவர் ஒரு பாகிஸ்தானி அஹ்மதி இளைஞரின் நண்பராவார். அவரது ஆடையை பார்க்கும் போது அவர் அஹ்மதி போன்ற தோற்றம் இருந்தது. ஏனென்றால், ஸல்வார் கமீஸ் அணிந்து அவர் மாநாட்டிற்கு வந்திருந்தார். ஒருவேளை தனது நண்பரிடமிருந்து இந்த ஆடையை அவர் பெற்றிருக்கலாம். அவர் நானும் அஹ்மதியாக விரும்புகின்றேன் என்று கூறி என்னிடம் வந்தார். நான் அவரிடம் உங்களது ஆடை, தோற்றம் ஆகியவற்றை பார்க்கும்போது நீங்கள் அஹ்மதி போன்று எனக்கு தெரிகிறது என்று கூறினேன். அதற்கு அவர் இல்லை. நான் கிறிஸ்தவனாவேன். இன்று நான் அஹ்மதியாக விரும்புகின்றேன் என்ற கூறினார். அந்த சபையில் இருந்ததால் அவரும் என்னிடம் பைஅத் செய்து விட்டார். நான் அந்த இளைஞரிடம் நீங்கள் மிகவும் சிறிய வயதில் உள்ளவர். 17 அல்லது 18 வயதுதான் உங்களுக்கு ஆகின்றது. எனவே, உங்களது பெற்றோர்கள் நீங்கள் பைஅத் செய்வதை தீமையாக கருதிவிட வாய்ப்பு உள்ளதால் நீங்கள் நன்றாக சிந்தனை செய்து கொள்ளுங்கள். உங்களது வீட்டில் சில சிரமங்களை சந்திக்க வேண்டியது வரலாம் என்று கூறினேன். அதற்கு அந்த இளைஞர் எனக்கு என்ன நேர்ந்தாலும் கவலையில்லை. நான் உண்மையை தேடிக்கொண்டிருந்தேன். நான் அஹ்மதிய்யத்தை நன்றாக அறிவேன். இன்று நான் எல்லாவற்றையும் முழுமையாக நன்றாக பார்த்து விட்டேன். எனவே, இப்போது நான் அஹ்மதியாகி விட்டேன் என்று கூறினார். பைஅத் நடைபெற்ற போதும் மிக உணர்வுப்பூர்வமான ஒரு சூழ்நிலை அங்கு இருந்தது. பைஅத்தின்போது இருவருமே அழுதவாறே பைஅத் சொற்களை திரும்பக் கூறிக் கொண்டிருந்தனர். ஐரோப்பாவில் வசிக்கின்ற இத்தகைய இளைஞர்கள் வரை உண்மையான முறையில் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்றடைந்து விட்டால் இந்த நாடுகளிலுள்ள இளைஞர்களிடம் காணப்படும் நிம்மதியற்ற நிலையில் அமைதியைத் தேடியவாறு நிச்சயமாக அவர்கள் அஹ்மதிய்யத்தின் மடியில் வந்து விழுவார்கள். ஆனால் தூதுச் செய்தி சரியான முறையில் அவர்களை எட்ட வேண்டும் என்பது நிபந்தனையாகும்.

நாமும் நமது நிலைமைகளின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் இந்த மக்களுக்கு செயல் அளவிலுள்ள ஒரு முன்மாதிரியாக நாம் திகழ வேண்டும். இவ்வாறே தப்லீகின் பக்கமும் கவனம் இருக்க வேண்டும். அதன் மூலம் உலகத்தை இறைவனுக்கு அருகில் கொண்டு வந்து அவர்களுக்கு உண்மையாக நிம்மதியை வழங்குபவர்களாக நாம் ஆகலாம். உண்மையைத் தேடுகின்ற நல்ல இயல்புள்ள ஒவ்வொருவருக்கும் சரியான முறையில் தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டு விட்டால் அல்லது அவர் செயல் அளவிலான நமது முன்மாதிரியை கண்டால் நிச்சயமாக அப்படிப்பட்டவர்களுக்கு அஹ்மதிய்யத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டு விடும். ஒவ்வொரு பக்கமும் குரல் கொடுப்பது நமது பணியாகும். எவரது இயல்பு நல்லதாக இருக்கின்றதோ அவர் இறுதியில் நம்மிடம் வருவார் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

நாம் கொடுக்கின்ற இந்த குரலுக்கு ஒரு தனித்தன்மை இருக்கின்றது. அதன் பக்கம் மக்களது கவனத்தை திருப்ப அஹ்மதிகள் முயற்சிகளைச் செய்கின்றார்கள். நமது குரல் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும். நமது குரல் பொதுவான குரலாக இருந்து விட்டால் மக்களது கவனம் இதன் பக்கம் திரும்பாது. எனவே, மக்களது கவனத்தை ஈர்க்கும் தகுதியுடையதாக ஆக்க வேண்டியது அவசியமாகும். இந்த நிலைமையானது செயல் அளவிலான முன்மாதிரியின் மூலமாகத்தான் உருவாகும். குரல் கொடுக்கின்ற ஒருவர் எப்போது குரல் கொடுத்தாலும் அவர் தனது செயல் அளவிலான முன்மாதிரியையும் நிலைபெறச் செய்ய வேண்டும். நல்ல இயல்புள்ளவர்களுக்கு இதன் பக்கம் கவனம் ஏற்படும்போது அவருக்கு இந்த குரலுடன் தன்னை இணைத்துக் கொள்வதை தவிர வேறு வழி இருக்காது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைவதுதான் அவரது நிம்மதிக்கு காரணமாக இருக்கும்.

இந்த வருடம் அஹ்மதிய்யா கிலாஃபத் தோன்றி நூறு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி மற்ற மாநாடுகள் போன்று ஜெர்மனியில் நடைபெற்ற மாநாடும் பல்வேறு மகிமைகளைத் தன்னகத்தே கொண்டதாக இருந்தது. கலந்து கொண்டவர்களது எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது. அதன் காரணமாக விரிவான ஏற்பாடும் இருந்தது. மாநாட்டுப் பணியில் இருந்தவர்களும் அல்லாஹ்வின் அருளால் இந்த விரிவான ஏற்பாட்டை முழுமையாக ஏற்றுச் செயல்பட்டார்கள். இப்போது அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மாநாட்டுப் பணியாளர்களுக்கு எந்த அளவு பயிற்சி கிடைத்துள்ளது என்றால் விரிவான ஏற்பாடானது அவர்களிடம் எந்த பீதியையும் ஏற்படுத்தவில்லை. ஆனால், இந்த மேற்கத்திய நாடுகளில் மாநாட்டு ஏற்பாடுகளில் விரிவான நிலை ஏற்படும்போது அரசாங்கத் துறையும் அதிகமாக நம் பக்கம் கவனம் செலுத்துபவர்களாக ஆகிவிடுகின்றார்கள். ஜெர்மனியிலும் இப்படித்தான் நடந்தது. துப்புறவுப் பணிகளை பார்வையிடுகின்ற அரசுத்துறை ஒன்று ஜெர்மனியில் இருக்கின்றது. கடந்த ஆண்டும் இவர்கள் சிறிது கடுமை காட்டினார்கள். ஆனால், இந்த வருடம் துப்புறவுப் பணிகள், எல்லா இடங்களையும் தூய்மையாக வைத்திருத்தல், உணவு ஆகியவற்றின் பக்கம் இந்த துறையின் குறிப்பான கவனம் இருந்தது. உணவு சமைக்கப்படும் லங்கர் கானாவிற்கு வந்த இந்த துறையைச் சார்ந்தவர்கள் சிறிய சிறிய விஷயங்களில்கூட ஆட்சேபனைகளைச் செய்து வந்தார்கள். ஆனால், மாநாட்டுப் பணியாளர்கள் எல்லா வகையிலும் முயற்சி செய்து அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கும் தரத்தைப் பெறுவதன் பக்கம் கவனம் செலுத்தி வந்தார்கள். அதனால் எந்தப் பெரிய ஆட்சேனையையும் செய்ய அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இவ்வாறு ஆண்டு மாநாடு நல்ல முறையில் நடந்து முடிந்தது. எந்த கவலையும் நமக்கு ஏற்படவில்லை. அல்லாஹ் எதிர்காலத்திலும் அவர்களை எல்லா விதமான கவலைகளிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக. கடந்த வருடம் அண்டாக்களை கழுவுகின்ற ஒரு Machine தொடர்பாக ஜெர்மனியில் நிகழ்த்திய எனது குத்பாவில் நான் கூறியிருந்தேன். மூன்று சகோதரர்கள் சேர்ந்து இந்த Machine-ஐ உருவாக்கியுள்ளார்கள். இவர்கள் இந்த Machine ஐ முழுமையாக தானியங்கி இயந்திரமாக ஆக்கி விட்டார்கள். இந்த மூன்று சகோதரர்களில் ஒருவர் கூட Engineer அல்ல என்பது வியப்பூட்டக்கூடிய ஒரு விஷயமாகும். அவர்களில் ஒருவர் Biology-ல் Degree பெற்ற பிறகு தொடர்ந்து படித்து வருகின்றார். இரண்டாவது சகோதரரும் இதே போன்று வேறு ஒரு Subject -ல் Ph.D படித்து வருகின்றார். மூன்றாவது சகோதரர் Secondary School-ல் படிக்கின்றார். பணி செய்ய வேண்டும் என்ற உண்மையான துடிப்பு இருந்தால் படிப்போ வேறு எதுவுமோ ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதில் எவ்வகையிலும் தடையாக இருக்க முடியாது. முதலில் அண்டா ஒரு Belt -ல் வைக்கப்படுகிறது. கழுவப்பட

வேண்டிய அந்த அண்டாவை Belt தானாகவே Machine ற்குள்ளே கொண்டு செல்கிறது. இது முழுமையான Computerised அமைப்பாக செயல்படுகிறது. அதற்கேற்ப Soap ம், சுடு தண்ணீரும் தேவைப்படும் அளவில் அண்டாவிற்குள் தானாகவே எறியப்படுகிறது. அத்துடன் Machine ற்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கின்ற பல்வேறு வகையிலான Brush –கள் அவற்றை சுத்தம் செய்ய ஆரம்பிக்கின்றன. அந்த Machine ற்கு கீழே Staddler இணைக்கப்பட்டுள்ளது. அண்டாவின் ஏதாவதொரு பகுதி தீயினால் கருகியதன் விளைவாக கரி பிடித்திருந்தால் அதனை இந்த Staddler நன்றாக கழுவி சுத்தம் செய்து முற்றிலும் பளபளவென மின்னும் வகையில் அதை செய்து விடுகின்றது. இரண்டு நிமிடங்களில் அண்டா கழுவப்பட்டு Machine ற்கு மறுபக்கமாக வெளியில் வந்து விடுகிறது. காதியானிலுள்ள அண்டாக்களுக்கு ஏற்ப அங்குள்ள தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இந்த சகோதரர்கள் Mchine தயார் செய்கின்றார்கள். ஏனென்றால், அங்குள்ள அண்டாக்கள் இங்குள்ள அண்டாக்களை விட சற்று மாறுபட்டதாகும். அந்த அண்டாக்களின் வாய் சிறியதாக இருக்கும். கீழே அது விரிவாக இருக்கும். அதனால் அவற்றை சரியாக கழுவ முடியாது. எனவே, அந்த அண்டாக்களுக்கு ஏற்ப இவர்கள் தங்கள் Mchine ஐ Design செய்ய வேண்டியது வரும். ஆனால், விரைவில் இதற்காக அவர்கள் Machine தயார் செய்கின்ற உறுதியான எண்ணத்தில் இருக்கின்றார்கள். அல்லாஹ் இந்த மூன்று சகோதரர்களின் முயற்சிகளிலும் அருள் செய்வானாக. இந்த மூன்று சகோதரர்கள் பெயர் பின்வருமாறு:

1. **அதாவுல் மன்னான் ஹக்**
2. **உதூதுல் ஹக்**
3. **நூருல் ஹக்**

அல்லாஹ் இவர்களது மனத்தூய்மையையும் ஆழ்ந்த பற்றையும் எப்போதும் நிலைநாட்டுவானாக. எதிர்காலத்திலும் இவர்களுக்கு சிறந்த முறையில் ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதற்கான தவ்ஃபீகை வழங்குவானாக. இவர்களுக்கு கிடைக்கும் ஒவ்வொரு வெற்றியும் இவர்களிம் மேலும் பணிவை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கட்டும். சில நேரங்களில் இதனால் உள்ளத்தில் கர்வம் வந்து விடும். அல்லாஹ் நன்றாக பணி செய்கின்ற ஒவ்வொரு அஹ்மதியின் உள்ளத்திலும் எப்போது ஒரு நல்ல காரியத்தைச் செய்தாலும் அதன் மூலம் அவரை அல்லாஹ் பணிவில் முன்னேறச் செய்வானாக.

இந்த முறை குத்தாமுல் அஹ்மதிய்யா கிலாஃபத் ஜுப்ளியையொட்டி அங்கு Sports Tournament நடத்தினார்கள். அதுவும் மாநாடு நடைபெற்ற அந்த திடலிலேயே நடைபெற இருந்ததால் முன்கூட்டியே இதற்கான தயாரிப்பு ஆரம்பமாகி விட்டது. குத்தாம்கள் மிகுந்த உழைப்புடன் முதலிலேயே இந்த வேலைகளைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். எல்லா ஏற்பாடுகளையும் நல்ல முறையில் செய்து முடித்தார்கள். எல்லா வருடங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்கு முன்பாகவே குத்தாம்கள் வகாரே அமலிற்காக நேரம் ஒதுக்க ஆரம்பித்து விட்டார்கள். ஜெர்மனியில் மாநாட்டுக் கூடாரத்தையும் இவர்கள்தான் அமைக்கின்றார்கள். இது மிகவும் திறமையான ஒரு பணியாகும். சிலருக்கு இந்த பணியின் காரணமாக காயமும் ஏற்படுகின்றது. மிகவும் உணர்வுடன் இவர்கள் இந்தப் பணியைச் செய்து கொண்டே செல்கின்றார்கள். எவ்வித பகட்டுமின்றி பல நாட்கள் வரை அவர்கள் இந்த பணியைச் செய்கின்றார்கள். சிலருக்கு 24 மணி நேரம் அல்லது 28 மணி நேரம் கழிந்த பிறகுதான் தூங்குவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மாநாடு முடிந்த பிறகு Wind up பணிகள் இருக்கின்றன. இதுவும் மிகவும் கஷ்டமாக பொறுப்புகள் நிறைந்த ஒரு பணியாகும். எல்லாவற்றையும் சுத்தப்படுத்த வேண்டும். எல்லா பொருள்களையும் ஒன்றுசேர்க்க வேண்டும். அவற்றை கழுவ வேண்டும். இப்படி பல பணிகள் செய்கின்ற இவர்கள் எல்லாருக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக. மாநாட்டுப் பணியில் இருந்த அனைவருமே நன்றி தெரிவிப்பதற்குத் தகுதியுடையவர்களாக உள்ளனர்.

மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு மாநாட்டு நிகழ்ச்சிகளை கேட்டு விட்டுச் சென்று விடுவார்கள். ஆனால், மாநாட்டு ஏற்பாடுகளை திறம்படச் செய்வதிலும் மாநாடு முடிந்த பிறகு இடத்தை சுத்தப்படுத்தி ஒப்படைக்க வேண்டிய பொருள்களை மாநாட்டு அமைப்பிடம் ஒப்படைப்பதில் எவ்வளவு உழைப்பும் நேரமும் செலவிடப்படுகிறது என்பது அவர்களுக்கு தெரியாது. இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்தின் சிப்பாய்களாவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்களது விருந்தினர்களுக்காக தங்களை அர்ப்பணிப்பது இவர்களது ஒரு இயல்பாகவே ஆகி விட்டது. ஏதாவது ஒரு காரணத்தால் இவர்களிடம் நாம் இந்த தொண்டை ஒப்படைக்காமல் இருந்தால் இந்த மக்கள் அதன் காரணமாக அமைதியின்மைக்கு இரையாகிவிடுகின்றார்கள். கிலாஃபத்தின் மீது ஆழ்ந்த பற்றின் காரணமாக கிலாஃபத்தின் ஒவ்வொரு குரலுக்கும் கட்டுப்பட்டு செவிசாய்த்து நடப்பதற்கு எல்லா நேரமும் இவர்கள் தயாராக இருக்கின்றார்கள். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக. இவர்களது செல்வத்திலும் உயிரிலும் அளவற்ற அருள்களை வைப்பானாக.

7 அல்லது 8 வயதில் உள்ள சிறுவர்களிலிருந்து 60 அல்லது 70 வயதுடைய முதியவர் வரை ஒவ்வொருவரும் மிகவும் பொறுப்புணர்வுடன் தங்களது duty ஐ கவனத்துடன் செய்வதைக் கண்டு அஹ்மதி அல்லாத மற்றவர்களும் சிறந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளார்கள். பிறகும் எவரது நெற்றியிலும் சோர்வின் எந்த அறிகுறியும் தென்படவில்லை. மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றியுள்ளார்கள். அவர்களது முகங்களில் விருந்தினர்களுக்கு தொண்டு செய்த மகிழ்ச்சி வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. பிறகு மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு இடையில் நிலவுகின்ற அன்பு மற்றும் சகோதரத்தன்மையின் சூழலை நாம் பார்த்தோம். இதுவும் அஹ்மதிகள் அல்லாத மற்றவர்களுக்கிடையில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. இது எப்படிப்பட்ட விஷயம் என்றால் இது ஒவ்வொரு அஹ்மதியுடைய தனிப்பட்ட சிறப்பம்சமாகும். அவ்வாறு இருக்கவும் வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாடுகளின் நோக்கங்களாக குறிப்பிட்டவற்றில் ஒருவருக்கும் மற்றவருக்கும் இடையில் அன்பு ஏற்பட வேண்டும் என்று கூறியுள்ளார்கள். மாநாட்டைப் பார்க்க வருகின்ற அஹ்மதிகள் அல்லாத மற்றவர்களிடம் இது மிக சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வளவு பெரிய கூட்டத்தில் எங்குமே போலீஸ் எங்களுக்கு தென்படவில்லை. எல்லா பணிகளும் எவ்வித தடையுமின்றி இனிதே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று ஜெர்மனியில் அஹ்மதிகள் அல்லாத பலரும் ஜமாஅத்தை புகழ்ந்து என்னிடம் கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எங்களிடம் உருவாக்கியுள்ள தூய்மையான புரட்சியாகும் இது என்பதை நாம் இவர்களுக்கு எப்படி புரிய வைக்க முடியும்? நீங்களும் இந்த ஜமாஅத்தில் இணைந்து விட்டால் உங்களது நிலைமையும் இப்படித்தான் இருக்கும் என்றே நாம் இவர்களிடம் கூற வேண்டும். ஏனென்றால், இந்த நிலைமைகளை உருவாக்குவதற்காக தொடர்ச்சியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு பயிற்சி அளித்து வந்துள்ளார்கள். அவர்களது மறைவுக்குப் பிறகு கிலாஃபத் நமக்கு இந்த பயிற்சிகளை வழங்கி இருக்கின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“நல்லொழுக்கத்தை சரி செய்வது என்பது மிகவும் கடினமான ஒரு வேலையாகும். மனிதன் தன்னைப் பற்றி ஆய்வு செய்து பார்க்காத வரை இந்த சீர்திருத்தம் ஏற்பட முடியாது. நாவினால் வெளிப்படும் தீய ஒழுக்கங்கள் பகைமையை ஏற்படுத்தி விடுகின்றன. எனவே, உங்களது நாவை எப்போதும் உங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.”

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“பலவீனமான சகோதரர்களுக்கு உதவி செய்வது நமது வழிமுறையாக இருக்க வேண்டும். அதன் மூலம் அவர்களுக்கு நாம் ஆற்றலை வழங்க வேண்டும்.”

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“திருக்குர்ஆனில் **தஅவனு அலல் பிர்ரி வ தக்வா** – நன்மையிலும் தக்வாவிலும் உங்களில் ஒருவர் மற்றவருக்கு ஒத்துழைப்பு நல்குங்கள் என்று வந்துள்ளது. உங்களது பலவீனமான சகோதரர்களுக்கு உதவி செய்து அவர்களை வெளியில் கொண்டு வாருங்கள். சக்தி படைத்தவர்கள் பலவீனமானவர்களுக்கு ஆதரவாக செயல்படாத வரை எந்த ஜமாஅத்தும் ஜமாஅத்தாக இருக்க முடியாது. அதற்குள்ள வழி அவர்களது குறைகளை திரையிட்டு மறைப்பதேயாகும். புதிதாக இஸ்லாத்தை தழுவும் முஸ்லிம்களைப் பார்த்து நீங்கள் கடுகடுப்புடன் நடந்து கொள்ளக்கூடாது என்பதே சஹாபாக்களுக்கு வழங்கப்பட்ட போதனையாகும். ஏனென்றால், நீங்களும் இப்படித்தான் பலவீனமாக இருந்தீர்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டது. இவ்வாறே

பெரியவர்கள் சிறியவர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும். அன்புடனும், மென்மையுடனும் அவர்களிடம் பரிமாற வேண்டும். ஒருவர் மற்றவரது செல்வத்தை விழுங்குகின்ற வரை ஒரு ஜமாஅத் ஜமாஅத்தாக இருக்க முடியாது.”

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“ஒருவர் மற்றவரது பலவீனங்களை திரையிட்டு மறைத்து ஒருவர் மற்றவருடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதன் மூலமாகவே ஜமாஅத் உருவாகின்றது. இந்த நிலைமை உருவாகி விட்டால் அவர்கள் ஓருடலில் உள்ள பல்வேறு உறுப்புகள் போன்று ஆகி விடுவார்கள். ஒரு உண்மையான சகோதரனை விட மேலாக அவர்களில் ஒருவர் மற்றவரை கருதுவார்.”

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இப்போது உங்களிடம் ஒரு புதிய சகோதரத் தன்மை நிலைநாட்டப்பட வேண்டும். பழைய தொடரானது அறுந்துவிட வேண்டும். அல்லாஹ் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கியுள்ளான். அதில் பணக்காரர், ஏழை, சிறியவர், இளைஞர், முதியவர் ஆகிய எல்லா வகையான மக்களும் இணைந்துள்ளனர். ஏழைகள் மீது தங்களது கண்ணியமிக்க சகோதரர்களுக்கு மதிப்பளிப்பது கடமையாகும். பணக்காரர்கள் மீது ஏழைகளுக்கு உதவி செய்வது கடமையாகும். அவர்களை அற்ப்பமானவர்களாகவும், இழிவானவர்களாகவும் கருதக் கூடாது. ஏனென்றால், அவர்களும் உங்கள் சகோதரர்களாவார்கள்.”

இந்த விஷயங்களை ஒவ்வொரு அஹ்மதியும் கண் முன் நிறுத்தி செயல்பட வேண்டும். அதன் மூலமாக நல்லொழுக்கத்தையும் தரம் உயர்ந்து கொண்டே செல்ல வேண்டும். நாம் மற்றவர்களது கவனத்தையும் நம் பக்கம் ஈர்க்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இதுவே நமது தப்லீகிற்குரிய வழியாகவும் அமையும்.

இந்த முறை பெண்கள் மாநாட்டு திடலிலிருந்தும் பொதுவாக ரிப்போர்ட் சிறப்பாக இருந்தது. கடந்த வருடம் இவர்களிடம் காணப்பட்ட குறையை முழுமையான மனத்தூய்மையுடன் இவர்கள் கழுவி சுத்தம் செய்துவிட்டார்கள். அவர்கள் மீது நான் விதித்த தடையின் காரணமாக அவர்களுக்கு அதிகமாக இஸ்திக்ஃபார் செய்வதற்கான வாய்ப்பும் கிடைத்தது. எவ்வளவு வேதனை நிறைந்த கடிதங்களை எழுதி பெண்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்றால் உண்மையிலேயே அது அவர்களின் உள்ளத்தின் ஓசையேயாகும். இந்த முறை பொதுவாக பெண்களில் பெரும்பாலாரது அடக்கமான செயல்முறை அதை நிரூபித்துக் காட்டி விட்டது. இந்த விஷயமும் இறைவனுக்கு நன்றி தெரிவித்து அவனை புகழ்வதன் பக்கம் நமது கவனத்தை திருப்புகிறது. எந்த அல்லாஹ்வின் பிடியில் ஒவ்வொரு உள்ளமும் இருக்கின்றதா அவரைத் தவிர வேறு யாராலும் கிலாஃபத்தின் ஒவ்வொரு குரலைக் கேட்டு எழுகின்ற, அமர்கின்ற இந்த கட்டுப்படுகின்ற நிலையை உருவாக்க முடியாது.

ஒரு ஜெர்மனி அஹ்மதியிடம் நான் கடந்த வருடத்தை விட இந்த வருடம் நீங்கள் ஏதாவது வித்தியாசத்தை உணர்கின்றீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர் கிலாஃபத்தின் தகுதி தொடர்பாக நாங்கள் முன்பை விட அதிகமாக புரிந்து கொண்டோம். கிலாஃபத்துடன் உள்ள உறவும் முன்பை விட அதிகமாக இருப்பதை உணர முடிகிறது என்று கூறினார். கிலாஃபத் தொடர்பான எல்லா நிகழ்ச்சிகளும் இத்தகைய சிறப்பான மாற்றத்தை உருவாக்கியிருக்கின்றது. அல்லாஹ் இதற்கு உயர் தகுதியை வழங்குவானாக.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல் வஸிய்யத் என்ற நூலில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

“நீங்கள் அனுதாபம் காட்டுவதிலும் உங்களது நஃப்ஸை தூய்மைப்படுத்துவதிலும் ரூஹுல் குதூஸடமிருந்து – பரிசுத்த ஆவியிடமிருந்து உங்கள் பங்கை பெற்றுக் கொள்ள வேண்டும். ரூஹுல் குதூஸ் – பரிசுத்த ஆவியின் உதவி இல்லாமல் உண்மையான தக்வாவை நாம் பெற முடியாது. உலகத்தின் இன்பங்களில் உங்கள் உள்ளங்களை பறிகொடுத்து விடாதீர்கள். அது உங்களை இறைவனிடமிருந்து பிரித்து விடும்.”

இந்த தக்வாவின் தரத்தைப் பெற எவர் முயற்சி செய்தாலும் அவர் இறை நெருக்கத்தின் தகுதியை பெற்றுக் கொள்வார். அவனது அருட்கொடையிலிருந்து அவருக்கு பங்கு கிடைக்கும்.

இந்த வருடம் ஜெர்மனியில் கிலாஃபத்தையொட்டி ஒரு புகைப்பட கண்காட்சிக்கான ஏற்பாடும் செய்யப்பட்டு இருந்தது. இதுவும் அவர்களது நல்ல முயற்சியாகும்.

ஒட்டுமொத்தமாக அல்லாஹ்வின் அருளால் ஜெர்மனியின் ஆண்டு மாநாடு அல்லாஹ்வின் அருள்களை தன்னகத்தே கொண்டிருந்தது. அல்லாஹ் பணியில் ஈடுபட்டிருந்த ஆண்களுக்கும், பெண்களுக்கும் நற்கூலி வழங்குவானாக. மனத்தூய்மையிலும், ஈமானிலும் அவர்களை வளர்ச்சியடையச் செய்வானாக. தக்வாவில் முன்னேறியவர்களாக தங்களது படைப்பின் நோக்கத்தை புரியக் கூடியவர்களாக அவர்களை அல்லாஹ் ஆக்குவானாக.

இதற்கு பிறகு நான் துஆவிற்கான ஒரு அறிவிப்பை செய்ய விரும்புகின்றேன். இன்றைய நாட்களில் இந்தியாவின் சில பகுதிகளில் அஹ்மதிய்யத்திற்கு இருந்து வரும் எதிர்ப்பு வலுவடைந்துள்ளது. கிலாஃபத் ஜுப்ளியையொட்டி இந்தியாவிலுள்ள ஹைதராபாத்தில் நடந்த நமது ஒரு கூட்டத்தில் எதிரிகள் பெரும் கூச்சலிட்டார்கள். மாநாட்டு தயாரிப்பில் ஈடுபட்டிருந்த சமயத்தில் ஆரம்பத்திலேயே நடைபெற்ற ஊர்வலங்களில் பொருட்களை உடைத்து சேதம் விளைவித்ததால் பல இடங்களிலும் நாம் நமது கூட்டங்களை அங்கு நடத்த முடியவில்லை. கடந்த சில நாட்களுக்கு முன்னர் (உத்திரபிரதேசத்திலுள்ள) சரான்பூரில் அஹ்மதிகளின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அங்கு அஹ்மதிகள் அடிக்கப்பட்டுள்ளனர். பொருள்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன. வீடுகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. நெருப்பு மூட்ட முயற்சிகள் நடந்துள்ளன. இந்துக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாக இருப்பதால் இந்துக்கள் இந்த கொடுமைகளை செய்வதாக நம்மால் கூற முடியாது. மாறாக, இறைவனது பெயராலும் இஸ்லாத்தின் பெயராலும் இந்த கொடுமையை இந்த பெயர்தாங்கி ஆலிம்கள்தான் செய்கின்றார்கள். இங்கும் முல்லாக்கள்தான் இக்கொடுமைகள் இழைப்பதற்கு தூண்டுகோளாக செயல்பட்டு வருகின்றார்கள்.

சில அஹ்மதிகளை மிகவும் மோசமாக இவர்கள் அடித்துக் காயப்படுத்தி உள்ளார்கள். இவர்கள் எல்லாரும் புதிதாக பைதத் செய்தவர்களாவார்கள். அல்லாஹ்வின் அருளால் இவர்கள் எல்லாருமே வலுமான ஈமானைப் பெற்றுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்துள்ள அந்த மஹ்தியைத்தான் நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதில் அவர்கள் உறுதியாக நிலைபெற்றுள்ளார்கள்.

இந்த எல்லா அஹ்மதிகளும் அவர்கள் இருந்த இடத்திலிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு விட்டனர். சிலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இவர்களது வீட்டிற்கும் பொருள்களுக்கும் பெரும் இழப்பை எதிரிகள் ஏற்படுத்தியுள்ளார்கள். கொடுமையிழைத்தவர்கள் புதிய அஹ்மதிகள் பீதியடைந்து அஹ்மதிய்யத்தை விட்டு விடுவார்கள் என்ற எண்ணத்தில்தான் இதை செய்துள்ளார்கள். ஆனால், இந்த கொடுமை இழைக்கப்பட்டதன் காரணமாக ஒரு வீட்டில் தந்தை மட்டும் அஹ்மதியாக இருந்தால், வீட்டிலுள்ள மற்றவர்கள் அஹ்மதிகளாக இல்லாமல் இருந்தால் தனது தந்தை மீது இழைக்கப்படும் கொடுமையைப் பார்த்து அந்த தந்தையின ஈமானில் இதற்கு பிறகு மேலும் ஏற்பட்டுள்ள உறுதியை கண்டு வீட்டிலிருந்த ஏனைய சந்ததிகளும் நாங்களும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று அறிவிப்பு செய்துள்ளனர். இந்த அடிதடியின் காரணாக அந்த இடத்தில் மேலும் 10 அல்லது 15 பேர் அஹ்மதிகளாகியிருக்கின்றார்கள். இந்த முல்லாக்களின் ஈமான் மேலோட்டமான வெளிவேசம் நிறைந்த ஈமானாக இருப்பதால் அஹ்மதிகளையும் இதே பார்வையில் அவர்கள் பார்க்கின்றார்கள். ஆனால், நல்லியல்புள்ள இந்த புது அஹ்மதிகளின் நிலைமையில் எத்தகு புரட்சி ஏற்பட்டுள்ளது என்பது பற்றி இவர்களுக்கு தெரியாது.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள இந்தியாவின் ஏனைய பல பகுதிகளிலும் அஹ்மதிகள் மீது கொடுமை இழைக்கப்படும் செய்திகள் வருகின்றன. இவ்வாறே பாகிஸ்தானிலும் இன்றைய நாட்களில் அஹ்மதிகளுக்கு எதிராக நடைபெறும் குழப்பங்களில் ஒரு புது வேகம் தெரிகிறது. லாஹுரில் நமது பிரச்சார மையத்திலிருந்த கலிமா தய்யிபாவை போலிசார் அகற்றியுள்ளார்கள். இவ்வாறு குன்றி என்ற இடத்தில் நமது பள்ளிவாசல் மீது கல் வீசி அதற்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள். இவ்வாறே அஹ்மதிகளின் வீடுகள் மீது கல்லெறியப்பட்டு இருக்கின்றது. இவ்வாறு எல்லா எதிர்ப்பும் இருந்தும் ஜமாஅத்தின் பாதங்கள் முன்னேற்றத்தை நோக்கி செல்வதைக் கண்டு இவர்களுக்கு வேதனையாக இருக்கின்றது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கிலாஃபத் ஜுப்ளியையொட்டி லாஹுரில் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தபோது ஜமாஅத்தே இஸ்லாமி அமைப்பைச் சார்ந்த ஒரு அரசியல் தலைவர் இவர்களுக்கு நிகழ்ச்சிகளை நடத்த விடக்கூடாது என்ற கூறினார். இவர்கள் கிலாஃபத் ஜுப்ளியை கொண்டாடி விட்டால் பிறகு இவர்கள் மேலும் முன்னேறிக் கொண்டே செல்வார்கள். நமது தகுதி தெருவிலுள்ள நாய்கள் போன்று ஆகி விடும் என்று அந்த அரசியல் தலைவர் கூறியுள்ளார். நாம் இவர்களை ஏசவில்லை. இவர்கள் தங்கள் தகுதியைப் பற்றி அவர்களே கூறிய வார்த்தைகள் இதுவாகும்.

இந்த எதிரிகளிடம் நான் தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இது அல்லாஹ்வின் விதியாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பாதங்கள் முன்னேறிக் கொண்டேதான் இருக்கும். இன்ஷா அல்லாஹ். அதை எவராலும் தடுத்த நிறுத்த முடியாது.

அநீதியிழைக்கப்பட்ட இந்த அஹ்மதிகளுக்கு குறிப்பாக நீங்கள் துஆ செய்யுங்கள். இந்த கொடுமைகள் முடிவுக்கு வரும் அந்த நாட்களை அல்லாஹ் விரைவில் நமக்கு மிக அருகில் கொண்டு வருவானாக.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என்று ஒருபோதும் கருதாதீர்கள். நீங்கள் இறைவனது கைளால் பூமியில் நடப்பட்ட விதைகளாவீர்கள். இந்த விதை வளரும். மலர்களைத் தரும். எல்லா பக்கமும் இந்த மரத்தின் கிளைகள் பரவும். அது ஒரு பெரிய மரமாக ஆகிவிடும் என்று இறைவன் கூறியுள்ளான்.”

இறைவனது இந்த கூற்றின் மீது நம்பிக்கை வைப்பவர்கள் அருளுக்குரியவர்கள். அவர்கள் இடையில் அவர்களுக்கு வருகின்ற சோதனைகளுக்கு அஞ்சாமல் இருக்க வேண்டும்.

நமது எதிரிகளும் இதை கேட்க வேண்டும். இந்த ஜமாஅத் ஒரு சிறிய செடியாக இருந்த போதும் இறைவன் இதனை பாதுகாத்தான். எந்த தாக்குதலையும் அவன் வெற்றியடையச் செய்யவில்லை. இன்று இந்த செடி அல்லாஹ்வின் அருளால் மரத்தின் வடிவத்தைப் பெற்று விட்டது. இன்னும் இந்த மரம் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருக்கின்றது. எதிர்காலத்திலும் அல்லாஹ் இதனை பாதுகாப்பான். ஆனால், எதிரிகள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளட்டும். அல்லாஹ் உங்கள் பெயரும் அடையாளமும் இல்லாமல் உங்களை ஆக்கி விடுவான். எனவே, உங்களது அழிவிற்கான அழைப்பை நீங்கள் விடுக்க வேண்டாம்.

அல்லாஹ் இவர்களுக்கு அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 29.08.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**